# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
# அசல் வழக்கு எண் – 13/2021

**வாதி தரப்பு சாட்சி–1 முருகேஷ் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 11.09.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) பிரதிவாதிக்கு அரசால் வீட்டுமனை பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையின் சொத்து விபரத்தில் தெற்கு பக்கம் பிரதிவாதியின் இடம் இருப்பதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி கெட்டிமெத்தை வீடு கட்டி அதில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி நில அளவையர் இடத்தை அளவீடு செய்து, அளவுகளை சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறிவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்து தேவர்மலை கிராமத்திற்கு செல்லும் தென்வடல் ரோட்டிற்கு மேற்குபுறம் உள்ளது என்றால் சரியல்ல, கிழக்குபுறம் உள்ளது. தாவா சொத்தின் கிழக்குபுறம் மனைக்காக போடப்பட்ட ரோடு உள்ளது என்றால் சரிதான். கிழக்குபுறம் கதவு எண் 38 என்பது எனது தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் பிரதிவாதி வீட்டிற்கு கிழக்குபுறம் சந்து இருப்பதாகவும், சந்திற்கு கிழக்குபுறம் வீரப்பன், வெள்ளையம்மாள் வாதியின் வீடு என குறிப்பிட்டு காட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு வீட்டுவரி யார் பெயரில் செலுத்துகிறோம் என்றால் எனது தாயார் பெயரில் செலுத்தி வருகிறோம்.

2) எனது தாயார் இறந்த பின்னிட்டு என் பெயருக்கு மாற்றிவிட்டேன். எனது பெற்றோரின் வாரிசு சான்றிதழ் வைத்திருக்கிறேனா என்றால் வைத்திருக்கிறேன், அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1994 ம் வருடம் அரசாங்கம் தாவா சொத்து உள்ள இடத்தில் நிலமற்ற ஏழைகளுக்கு பட்டா வழங்கினார்கள் என்றால் சரிதான். ஒப்படைப்பு செய்வதற்கு முன்பு மேற்படி இடம் தரிசாக இருந்ததைதான், இடமில்லாதவர்களுக்கு ஒப்புடைப்பு நமூனா கொடுத்தார்கள் என்றால் சரிதான். நில அளவையர் நிலத்தை அளந்த போது வா.சா.ஆ.1 ல் உள்ள அளவுகள் படி நிலத்தில் இல்லை என கூறினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் உள்ளபடி உட்பிரிவுகளின் அளவுகளும் பொருந்தவில்லை என நில அளவையர் கூறினார் என்றால் சரிதான். நில அளவையரால் வா.சா.ஆ.1 ல் உள்ள இடத்தை கண்டுபிடித்து சொல்லமுடியவில்லை என்றால் சரிதான். எனது தாயாருக்கு ஒரு இடம்தான் ஒப்படைப்பு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3) பின்னிட்டு அரசாங்கத்தால் என் பெயருக்கோ, என் தகப்பனார் மற்றும் தாயார் பெயருக்கோ வேறு இடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். என் தாயார் உயிருடன் இருந்த காலம் வரை நீ.ம.சா.2 ல் உள்ள வாதியின் வீடு என்ற

இடத்தில்தான் அனுபவம் செய்து வந்தார். அவர் பிரதிவாதியின் வீட்டில் எப்போதும் இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீடு முன்பு ஓட்டு வீடாக இருந்தது, பின்னிட்டு அவர் கெட்டி மெத்தை வீடு கட்டினார் என்றால் சரியல்ல, வேறு ஒரு நபரின் பெயரில் ஓட்டு வீடு இருந்தது. அதை அவர் வாங்கி கெட்டி மெத்தை வீடு கட்டினார், அப்போது நான் ஆட்சேபனை செய்தேன். பிரதிவாதி 2019 ல் கெட்டிமெத்தை வீடு கட்டி வரி போடப்பட்டது என்றால் சரியல்ல, 2021ல் தான் கட்டினார். 2019 லேயே பிரதிவாதி பெயருக்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, 2022ல் தான் கொடுத்தார்கள். சாட்சி மீண்டும் தற்போதுவரை பிரதிவாதி மின் இணைப்பு வாங்கவில்லை என்றும், அருகில் உள்ள வீட்டில் இருந்து மின் இணைப்பு எடுத்துள்ளதாக கூறுகிறார். பிரதிவாதியின் வீட்டின் முன்பு மின்கம்பம் உள்ளது என்றால் சரிதான்.

4) மேற்படி மின்கம்பத்தில் இருந்து பிரதிவாதியின் வீட்டின்று மின்இணைப்பு வருகிறதா என்றால் இல்லை. எங்களுக்கு வழங்கப்பட்ட இடத்தில்தான் நாங்கள் வீடு கட்டி வசித்து வருகிறோம் என்றும், தேவையில்லாமல் பிரதிவாதிகளின் இடத்தில் இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு இடத்தை கொடுத்ததாக சொல்லும் மற்றொரு முருகேசனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த முருகேசன் என்ற நபரே இல்லை என்றும், பிரதிவாதி பெயருக்குத்தான் அரசாங்கம் பட்டா கொடுத்தது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியால் எவ்வளவு நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது என்றால், எனது இடம் முழுவதிலுமே அவர் வீடு கட்டிவிட்டார். நான் சொல்வது தவறு என்றும், பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் அவர் வீடுகட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி நான் சொல்வது போல 3 செண்ட் இடத்தில் வீடுகட்டவில்லை என்றும், எனக்கு 3 செண்ட் இடம் அரசாங்கம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

5) பிரதிவாதி ஏற்கெனவே இருந்த வீட்டை இடித்துவிட்டு, அதே இடத்தின் அளவில்தான் தற்போது வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. முன்பு 10x17 அடி அளவில் வீடு இருந்தது. தற்போது 10x30 அடி அளவில் வீடு கட்டியுள்ளார். அரசாங்கம் எனக்கு பட்டா வழங்கிய இடம் சர்வே எண் 526/38 என்றும், ஆனால் நான் இவ்வழக்கில் 526/35 என தவறாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வீடு கட்டியுள்ள நிலம் அரசாங்கத்தால் அவருக்கு கொடுக்கப்பட்ட சர்வே எண் 984/37 என்றால் சரிதான், ஆனால் கட்டிடத்தை மாற்றி கட்டியுள்ளார். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பிரதிவாதியின் நிலத்தில் கட்டிடம் இருந்தது என்றும், அதில் உரிமை கொண்டாட எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் எனக்கு கொடுக்கப்பட்ட இடத்தில் குடியிருந்து கொண்டு, எனக்கு சம்பந்தமில்லாத பிரதிவாதியின்

நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கை அனுமானத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றும், பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் வசித்து வருகிறார் என்றும், எனது இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

6) நான் இவ்வழக்கை பிரதிவாதியின் கட்டிடம் இருக்கும் பகுதிக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது காலி இடத்திற்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால், கட்டிடம் இருக்கும் இடத்திற்குத்தான் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி அவரது இடத்தில் வசித்து வருகிறார் என்றும், நான் சொல்வது போல எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி கட்டியுள்ள கட்டிடத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், நான் கோரியுள்ள பரிகாரம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது சொத்து குறித்து உரிய விளம்புகை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்காத இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் வழக்குமூலம் பொய்யானது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**